Minutes of the Public Hearing conducted on **22.09.2026** at 11.00 A.M. at Dr. MRG Mahal, Srivai - Vagaikulam Main Road, Petmanagaram, Srivaikundam Taluk, Thoothukudi District for the Proposed Rough Stone & Gravel Quarry of **Thiru. Subburajan Rough Stone and Gravel Quarry, to be located at S.F.No. 1123/2 in Padmanabamangalam Village, Srivaikundam Taluk, Thoothukudi District.**

**Participants:**

| | | |
|---|---|---|
| 1. | Thiru. Vivek Yadav I.A.S | Sub-Collector, Thoothukudi. |
| 2. | Thiru. J. Hamoneth Joesun | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi. |
| 3. | Project Proponents and their representatives and the general public | As per Attendance Register (A copy of the Attendance Register is attached in Annexure - II). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi District welcomed the Sub Collector, Thoothukudi, Government Officers, General Public, Environmental Activists, Police Officials, Press, representatives of Thiru. Subburajan Rough Stone and Gravel Quarry and others who gathered for the meeting on behalf of Tamil Nadu Pollution Control Board and the District Administration. He informed that the public hearing is being conducted for obtaining Environmental Clearance from the State Environmental Impact Assessment Authority for the proposed Rough Stone & Gravel Quarry of Thiru. Subburajan Rough Stone and Gravel Quarry.

The District Environmental Engineer stated that as per the Environmental Impact Assessment Notification issued on 14.09.2006 by the Ministry of Environment, Forest and Climate Change, conducting a Public Hearing is mandatory for granting Environmental Clearance for Scheduled Projects.

He also informed that Advertisements regarding the Public Hearing were published in Tamil Newspaper 'Daily Thanthi' and English Newspaper 'The New Indian Express' on 21.08.2026. Further, DEE informed that wide publicity was made about the Public Hearing meeting through pamphlets and loud speakers in the surrounding villages. DEE informed the public that authorized EIA Consultant will make the power point Presentation regarding the Project and after that, the public can give their opinion about the project either orally or in writing. All views expressed would be recorded in audio/video format and will be submitted to the State Environmental Impact Assessment Authority with the approval of the District Administration. He requested the public to mention their name and village before delivering their opinions on the project in a peaceful manner. He requested the Sub-Collector to preside over the Public Hearing meeting. Then, he asked the representative of Thiru. Subburajan Rough Stone and Gravel Quarry to give the Technical presentation on the Project.

Environmental Consultant Mr. Swaminathan welcomed everyone and explained the details of the Project and the Environmental Management Plan through a Power Point presentation. Further, he informed that the paper advertisements of the Public Hearing were published on 26.06.2026 in 'Daily Thanthi' and 'The New Indian Express' newspapers and the project reports available in the Tamil Nadu Pollution Control Board website. He also informed the public that wide publicity was made regarding the Public Hearing through pamphlets and loudspeakers. He requested the public to record their views about the Project.

Thereafter, the District Environmental Engineer requested the public to give their opinion about the project by providing their name and village name before proceeding.

**After this, the public expressed their views: The views expressed by the public during the Public Hearing meeting are as follows:**

1. **Mr. S.P. Muthuraman, Environmental Activist, Tirunelveli:-**

If a public consultation meeting is held, then the draft EIA report must be provided in the regional language. He questions why it is not provided in Tamil, which is the regional language here. Draft EIA report for all other announced projects are uploaded on the website in both Tamil and English. But why it is not available in Tamil for this project alone? Persons who know only Tamil can reveal their opinions if the draft EIA report is available in Tamil. It is illegal to conduct public consultation meeting without the Tamil draft. Many meetings, without the regional language Tamil draft EIA report, had already been cancelled by the officials after bringing it to their knowledge.

There should be 36 documents attached to this report. It does not have 36 documents. Moreover, the VAO report, attached should mention whether there are any residences, water body or archeological site within 30 metres of the proposed project. But the project consultant did not mention about that. If it is included in Table 3, then it should be shown to the public.

In the meanwhile, the Padmanabhamangalam Panchayat President intervened and stated that there are neither houses nor agriculture within a 7-kilometer radius around this project. He said that this project would bring revenue to their village and they have come with the hope that 1,500 families will benefit from this project. Furthermore, he mentioned that the previous speaker does not belong to this district; he is from Thazhaiyuthu village, Tirunelveli district, and he does not have any connection with this project.

The District Environmental Engineer requested him to record his views after Mr. S.P. Muthuraman completely finished expressing his views.

Mr. S.P. Muthuraman spoke again, stating that conducting this meeting without the 36 documents is against the law. He said that if a project is brought forward, the project proponent must be the owner of that land. He stated that the land under Survey No. 1123/2 mentioned here does not belong to them exclusively in a personal capacity. This land is under a partnership share. All revenue department documents are in the name of V.V. Minerals, and there is no document in the name of Subburajan. He stated that an individual (Shareholder) has claimed ownership over this land, created a false document, claimed total entitlement based on it, applied for permission for this mine, and brought it up to this public hearing stage. When the land itself is not in their name how will you get stones from the quarry? All documents are in the name of V.V. Minerals. Furthermore, there is a pending case regarding this in the Hon'ble Supreme Court. In addition to that, the Hon'ble High Court Judge Mr. Kirubakaran has been appointed as the Receiver, and all these properties are under his supervision. Under such circumstances, he asked how permission could be granted for this project. He mentioned that the Village Map is contradictory in the village where this project is to be located. It passes through the middle of this project. The pathway and stream found in the village map belong to the government, and an individual cannot claim ownership over them. There is a path in the middle; keeping that, how can permission be granted to operate a mine? He stated that there are 2 ponds within 500 meters and 4 ponds within 1 meter around this mine. With 4 ponds around, how can a mine be operated in the middle? How can permission be granted for that? Moreover, if permission is given, it will be an act that causes great harm to the environment. He stated that he had already submitted a petition stating that this public hearing should not be conducted and that it lacks eligibility, and despite that, conducting this public hearing is illegal.

**2. Mr. Vaikundapandiyan, Padmanabhamangalam, Panchayat President:-**

He stated that the establishment of this quarry will generate income for their village and provide employment opportunities for 1,500 families. People travel as far as Thoothukudi by van for work, so if this quarry comes, it will be beneficial. There is no agricultural land around this quarry. There is a distance of 7 kilometers between this quarry and their town. He also mentioned that everyone living around their town has come to welcome this quarry.

**3. Mr. Palanithevar, Padmanabhamangalam:-**

He stated that agricultural lands are far away from their town. The livelihood in their town depends entirely on working in these quarries. If a new quarry comes up, people's livelihoods will grow, and there will be no environmental impact because of this. Industrial development is already happening around Padmanabhamangalam village, so they accept this wholeheartedly. There are no

agricultural lands; all are barren lands and hills. If a new quarry comes, it will provide employment opportunities, so he requested to permit it.

**4. Mr. Warrier, Advocate:-**

He stated that before conducting this public hearing, it was not asked who owns this land. On that basis, he said he has come to record that this public hearing is illegal. This land belongs to his client V.V. Vaikundarajan and V.V. Minerals. Subburajan and his brother had made a power of attorney document. After it, at present they are claiming that it has been signed by mistake, and has also filed a case in the High Court. However, that case was dismissed, and the High Court issued orders. Following that, the Supreme Court also dismissed this case. Furthermore, the Review Petition was also dismissed, and a Receiver has been appointed by the High Court. He stated that they have all the documents related to this. He added that there is another case regarding this land in the Valliyoor court. He expressed surprise as to on what basis a public hearing is being conducted for a land that is under litigation in court. He suggested that they could ask the local VAO through government advocates to find out who owns this land. He said he does not know on what basis they are conducting a public hearing for a place that does not have the landowner's name. He stated that this public hearing is illegal and added that he has come to submit High Court and Supreme Court documents to show that this land does not belong to Subburajan.

**5. Mr. V. Ramasubbu, Advocate, Srivaikundam:-**

He stated that this public hearing is meant for the general public living around this area, and it is a meeting to discuss whether the establishment of this quarry is good or bad to the surrounding people, rather than a meeting to determine who the owner is. He said that to argue about ownership, one must go to the relevant court. Since the case relating to V.V. Mineral company is famous, he has been monitoring it as an advocate from the beginning, so he would share what he knows about the case. He stated that everything said by the advocate who spoke before him is a lie, and the court has not issued any order stating that this stone quarry land belongs only to Vaikundarajan. He mentioned that there are a total of 12 shareholders in this V.V. Mineral company, and Mr. Subburajan is one of the shareholders, so he has every right.

According to the current orders of the Hon'ble Supreme Court, the case regarding this company is pending in the Valliyoor court. Not only that, in connection with this case, the Hon'ble High Court Judge Mr. Kirubakaran has been appointed as the Receiver, and all complaints/matters regarding these properties are under his supervision. He stated that a meeting regarding this takes place every month. He warned that stating false information in front of the Sub-Collector is an offense under CRPC-340. He mentioned that while the court has not passed any

orders regarding who owns V.V. Mineral, these people are creating false documents to show that it belongs to Vaikundarajan. He stated that a month ago, for a land within the same disputed property, permission was sought under the name of M/s. Arima Grinding unit, which also has 12 shareholders. Vaikundarajan family has six members and Jegatheesan's family also has 6 members. He questioned how they conducted a public hearing while the case is pending. He stated that these advocates should have spoken at that public hearing saying that this land is in dispute and a public hearing should not be conducted. He said that if there are issues regarding ownership, they should go to court and not waste the precious time of the public and officials. He mentioned that the youth of this town do not have jobs, and if this quarry comes, there are chances that building construction materials will be available at a cheaper price to the surrounding people, so it should not be blocked. He stated that this is a newly proposed quarry; whether it were an expansion of an existing quarry, one could request to block it if there is any complaint,, but what they are recording here is purely for monetary benefits.

6. **Mr. Kasiventhan, Padmanabhamangalam:-**

He stated that they have applied to set up a quarry on 4.82.1 hectares in Survey No: 1123/2. He said that if the government does not give permission to set up a quarry in this place, a quarry will not run anywhere else. He mentioned that there are no residential areas or archeological monuments within a distance of up to 5 kilometers. He said that if permission is given for this quarry, it will provide employment opportunities for the people of Mathuramangalam, Sri Moolakkarai, Seethankulam, and Aniyaparanallur. He stated, "We are backward in terms of employment and peoples here are going to a cashewnut processing factory for work. If this quarry is established, youth will go to work and generate a good income, and our Panchayat will also get revenue." He added that this is a public consultation meeting, and court matters cannot be discussed here. He requested that the authorities can grant permission without any objection.

7. **Mr. S.V. Sankarpandiyan, Social Activist, Tirunelveli:-**

He stated that since his family and relatives are located in and around Padmanabhamangalam and Peroor, he came to know about the public hearing is taking place here and has come to express his views. He said he does not know whether this is a meeting to hear a sibling dispute or a public consultation meeting. They say a case is pending, but there is no connection between that and this public hearing. He stated to the officials that there is no law stating that Environmental Clearance under EIA should not be obtained while a case is pending. He mentioned that this is the land given by Vaikundarajan, and due to their family dispute, they have gone to court to get this land back. He stated that this is the case not only here but in all places like Tirunelveli and Sathankulam. He said that

Vaikundarajan has filed the case out of malice towards Mr. Subburajan. He stated that this is for the livelihood of the people, and the surrounding public will get benefit from this project. He mentioned that there is an opportunity to start more than 50 allied industries based on this. He stated, "We cannot survive on clean air alone; we are ready to tolerate everything for our livelihood. Only if we work hard we can earn money, and there is no other company here, so we need this quarry and all the village people welcome this.

**8. Mr. Vallinayagam, Peroor Village:-**

He stated that this quarry is going to be located in a place that does not cause hindrance to the general public, and it will provide employment opportunities to the public. He mentioned that this quarry is located 7 kilometers away from the town, so he requested to grant permission for this project.

**9. Mr. Sudalaimani, Advocate, Srivaikundam:-**

He stated that the establishment of this stone quarry will provide employment opportunities for both educated and uneducated people. This stone quarry will increase the livelihood of the people. He mentioned that no one will face any impact due to the establishment of this stone quarry. He said that all the village people have come to ensure that permission is granted for this stone quarry.

**10.Mrs. Jebakani, Social Activist:-**

She stated that as a social activist, one can come from any district to express his/her views. She said that if this stone quarry is established, the people get great benefits. She mentioned that youth, women, and lorry drivers will get employment opportunities, so she requested to grant permission for this quarry.

**11.Mr. Sivakumar, Driver:-**

He stated that for drivers like him, this quarry is their livelihood, so he welcomes this quarry. He mentioned that the arrival of a quarry brings progress to everyone, so he welcomes it.

**12.Mrs. Chitra, Padmanabhamangalam:-**

She stated that there is no negative impact due to the operation of the stone quarry here. Further, because of this quarry, stones and soil are available at lower prices, so she welcomes the arrival of the quarry.

**13.Mr. Arjunan, Srivaikundam:-**

He stated that the operation of the quarry will serve as an example for the development and infrastructure of our district. He asked the Village Panchayat President to cooperate and grant permission for industrial growth.

**14.Mr. Sankaralingam, Advocate:-**

He stated that this is a rural area where uneducated people and youth with low qualifications reside. If permission is granted for a quarry in these areas, they will get employment opportunities. No violations will take place overriding the Panchayat Council President. Therefore, he expressed wholehearted support for the arrival of this quarry.

**15.Mr. Ramesh, Advocate, Srivaikuntam:-**

He stated that Srivaikuntam town is a developing town. All the M-sand and rough stones required for construction areas are currently purchased 15 km away from the Srivaikuntam area. Only two quarries are operating in the Padmanabhamangalam areas. Since it is a developing town, a lot of construction is taking place, and they buy the required stones at a high price. With the arrival of this quarry, stones and materials will be available at a low price. Youth will get employment opportunities. Therefore, he stated that this quarry is needed.

**16.Mr. Pasumponraj, Advocate:-**

He stated that the people of this area depend on agriculture for their survival. Agriculture does not support them at all times; it supports them for only three months. If this stone quarry is established, the people of this area will get employment opportunities, so he humbly requested to grant permission.

**17.Mr. Palavesakannan, Advocate:-**

He stated that this is a public consultation meeting, and there is no need to discuss views related to ownership here. He mentioned that free subsidized houses built by the government are possible only because of this stone quarry. If one needs to buy 2 units of river sand, it costs Rs.26,000; people cannot afford that much money to build houses. No one is going to be affected by the establishment of this stone quarry. He mentioned that the forest department officials are protecting the deer properly. He stated that if the Tiruchendur area is a tourist destination, it is because of the stone quarry in Moolakkarai. Therefore, he requested to permit this formally.

**18.Mr. Sureshkumar, Social Activist, Sri Moolakkarai Village:-**

He stated that all the surrounding villages here are very backward in terms of education and economy. The government conducts job fair in all districts, but for them, employment comes only through these quarries. He mentioned that 5 quarries have been operating around Padmanabhamangalam for 25 years. He said that the infrastructure of their village areas has improved due to these quarries. He stated that lorry drivers and Poclain operators are more, and if this quarry is established, they will get employment opportunities. Not only that, if there is an event in their village, they provide financial assistance (Sponsor). He added that this stone quarry is also a reason for houses changing from thatched roofs to concrete roofs. Therefore, he recorded that they need this quarry.

**19.Mr. Akbar, Petmanagaram:-**

He stated that the arrival of this stone quarry provides benefits to the entire general public.

The District Environmental Engineer inquired if anyone else wished to express their opinions. No one preferred to come for expressing the view. He expressed his sincere thanks on behalf of the District Administration to the public for patiently registered their opinions. He further informed that all recorded views, both oral and written, along with audio/video recordings would be forwarded to the State level Environmental Impact Assessment Authority through the Corporate Office TNPCB, Chennai. He again expressed his gratitude to everyone who attended this Public Hearing.

**The following documents are attached along with the public hearing proceedings:**

1. Pen drive consisting of the Recorded Video (2-Nos) of the entire public hearing proceedings (Annexure – I).
2. List of participants who attended the public hearing (Annexure – II).
3. Written views/comments received for this project (10 petitions) have been attached as (Annexure – III).

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Thoothukudi.

Sub Collector,
Thoothukudi.

**தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தாலுகாவில் உள்ள பத்மநாபமங்கலம் கிராமம், புல எண்: 1123/2ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். சுப்புராஜன் ர/ப் ஸ்டோன் கிராவல் குவாரி என்ற நிறுவனம் குறித்து 22.09.2026 அன்று தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தாலுகா, பேட்மாநகரம் அஞ்சல், வாகைகுளம் மெயின் ரோட்டில் உள்ள டாக்டர். எம்.ஆர்.ஜி மஹாலில், காலை 11:00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விவரங்கள்:-**

**பங்கேற்றவர்கள்:-**

| | | |
|---|---|---|
| 1. | திரு.விவேக் யாதவ், இ.ஆ.ப | சார் ஆட்சியர்,<br>தூத்துக்குடி. |
| 2. | திரு.ஜே.ஹேமந்த் ஜோசன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>தூத்துக்குடி. |
| 3. | தொழிற்திட்ட உரிமையாளர்கள் மற்றும் அவரது பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டின் படி,<br>(வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) இணைப்பு - II |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தி/ள். சுப்புராஜன் ர.்.ப் ஸ்டோன் கிராவல் குவாரி என்னும் நிறுவனத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவனத்திற்கு, பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகைபுரிந்துள்ள சார் ஆட்சியர் அவர்களையும், பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கைத் துறையினர், தி/ள். சுப்புராஜன் ர.்.ப் ஸ்டோன் கிராவல் குவாரி நிறுவனத்தினர் மற்றும் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக வரவேற்றார்.

மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையின்படி, சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு பொதுமக்கள் கருத்துக்கேட்பு நடைபெற வேண்டியது அவசியமாகும் என்றார்.

இக்கூட்டத்திற்கான பொது அறிவிப்பு, 21.08.2026 அன்று ‘தினத்தந்தி’ மற்றும் ‘தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளிதழ்களில் வெளியிடப்பட்டிருந்ததைக் கூறினார். இக்கருத்துக்கேட்பு கூட்டம் குறித்து பொதுமக்கள் தெரிந்துக்கொள்ளும் வகையில் துண்டு பிரசுரம் மற்றும் ஒலிபெருக்கி மூலமாக விளம்பரம் செய்யப்பட்டது என்றார். திட்டம் குறித்து நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர் விவரித்த பின்பு, பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை வாய்மொழியாகவோ அல்லது எழுத்து வடிவிலாகவோ தெரிவிக்கலாம் என தெரிவித்தார். அவ்வாறு தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அனைத்தும் ஒலி/ஒளி பதிவுசெய்யப்பட்டு, மாவட்ட நிர்வாகத்தின் உரிய ஒப்புதலுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றார். பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊர் தெரிவித்து இத்திட்டம் சம்பந்தமான கருத்துக்களை அமைதியான முறையில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். மதிப்பிற்குரிய சார் ஆட்சியர் அவர்களை இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டார். அதன்பிறகு, தி/ள். சுப்புராஜன் ர/ப் ஸ்டோன் கிராவல் குவாரி நிறுவனத்தினரை இத்திட்டம் தொடர்பான விளக்கவுரையை தருமாறுக் கேட்டுக்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக அந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் ஆலோசகர் திரு.சுவாமிநாதன் திட்டம் தொடர்பாகவும் சுற்றுச்சூழல் மேலாண்மைத்திட்டம் தொடர்பாகவும் படவில்லை விளக்கக் காட்சி வாயிலாகத் தெரிவித்தார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் விவரங்கள் ஏற்கனவே 26.06.2026 அன்று 'தினத்தந்தி' மற்றும் 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததையும் திட்ட அறிக்கைகள் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் இணைய தளத்தில் உள்ளதாகவும், கருத்துக்கேட்பு கூட்டம் குறித்து துண்டு பிரசுரம் மற்றும் ஒலிபெருக்கி மூலமாக விளம்பரம் செய்யப்பட்டது என்றும் தெரிவித்துக் கொண்டு, பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை பதிவிடக் கேட்டுக் கொண்டார்.

பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் ஊர் பெயர் தெரிவித்து பின், திட்டம் தொடர்பான தங்களது கருத்துகளை பதிவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

1. **திரு. S.P. முத்துராமன், சமூக ஆர்வலர், திருநெல்வேலி:-**

பொது மக்கள் கருத்துக் கூட்டம் நடத்த வேண்டும் என்றால் Draft EIA report regional language-ல் போட வேண்டும், இங்கு regional language தமிழ் ஏன் அதை போடவில்லை என கேள்வி எழுப்பினார். மற்ற அறிவிக்கப்பட்ட திட்டங்களுகெல்லாம் Draft EIA report தமிழ் மற்றும் ஆங்கிலத்தில். இணையதளத்தில் உள்ளது என்றும் இந்த திட்டத்திற்கு ஆங்கிலத்தில் மட்டும் உள்ளது ஏன் தமிழில் போடவில்லை என்றும் கேள்வி எழுப்பினார். தமிழில் இருந்தால் மட்டுமே தமிழ் பேசும் பொது மக்கள் தங்கள் கருத்துக்களை சொல்ல முடியும் என கூறினார். Regional language தமிழில் போடாமல் இந்த கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது சட்டவிரோதம், இது போல் Regional language தமிழில் போடாமல் நடத்த இருந்த பல கூட்டங்கள் அதிகாரிகளின் கவனத்தில் கொண்டு வந்தவுடன் இரத்து செய்யப்பட்டுள்ளது.

EIA Draft report-ல் 36 ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும். இந்த அறிக்கையில் 36 ஆவணங்கள் இல்லை. அது மட்டுமல்லாமல் இதில் 3வது ஆவணமாக இணைத்திருப்பதாக கூறப்படும் வி.ஏ.ஓ. அறிக்கையில் இந்த திட்டத்தை சுற்றி 30 மீட்டர் பரப்பளவில் வீடு, நீர்நிலைகள் மற்றும் தொல்லியில் இடங்கள் உள்ளதா என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் ஆனால் திட்ட ஆலோசகர் அதை குறிப்பிடவில்லை. அவ்வாறு அட்டவணை-3ல் வி.ஏ.ஓ. அறிக்கையில் குறிப்பிட்டிருந்தால் அதை மக்களுக்கு காண்பிக்குமாறு கூறினார்.

**இடையில் பத்மநாபமங்கலம் பஞ்சாயத்து தலைவர் குறுக்கிட்டு இந்த திட்டத்தை சுற்றி 7 கிலோமீட்டர் தொலைவில் வீடுகள் இல்லை, விவசாயமும் இல்லை. இந்த திட்டத்தினால் எங்கள் கிராமத்திற்கு வருவாய் கிடைக்கும். ஆயிரத்தி ஐந்நூறு குடும்பங்கள் இந்த திட்டத்தினால் பயன்பெறுவார்கள் என்ற நம்பிக்கையில் வந்திருப்பதாக கூறினார். மேலும் இதற்கு முன் பேசியவர் இந்த மாவட்டத்தை சார்ந்தவர் இல்லை, தாழையூத்து கிராமம், திருநெல்வேலி மாவட்டம். அவருக்கு இந்த திட்டம் குறித்த சம்பந்தம் இல்லை என கூறினார்.**

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் திரு. S.P. முத்துராமன் அவரது கருத்துக்களை முழுமையாக கூறி முடித்தவுடன் தங்களது கருத்துக்களை பதிவு செய்யுமாறு கூறினார்.**

மீண்டும் **திரு. S.P. முத்துராமன்** 36 ஆவணங்கள் இல்லாமல் இந்த கூட்டம் நடத்துவது சட்டத்திற்கு புறம்பானது என கூறினார். ஒரு திட்டம் கொண்டு வந்தால் அந்த திட்டத்தின் உரிமையாளர் அந்த இடத்தின் முழு சொந்தகாரராக இருக்க வேண்டும். இங்கு குறிப்பிட்டிருக்கும் புல எண் 1123/2ல் உள்ள இடம் அவர்களுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது இல்லை. இந்த இடம் கூட்டாளி பங்கில் உள்ளது. வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் வி.வி. மினரல்ஸ் என்ற பெயரில் உள்ளது சுப்புராஜன் என்ற பெயரில் எந்த ஆவணமும் இல்லை. ஒரு தனிநபர் (Shareholder) தனக்கு இந்த இடம் பாத்தியப்பட்டது என கூறி பொய்யான ஆவணம் உருவாக்கி அதன் பெயரில் இந்த இடம் முற்றிலுமாக பாத்தியப்பட்டது என கூறி இந்த சுரங்கத்திற்கு அனுமதி கேட்டு கருத்து கேட்பு கூட்டம் வரை இதை கொண்டு வந்திருக்கிறார்கள். இடமே அவர்கள் பெயரில் இல்லை எப்படி கல் எடுப்பீர்கள்? எல்லா ஆவணங்களும் வி.வி.மினரல்ஸ் பெயரில் உள்ளது. மேலும் இது தொடாபாக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் வழக்கு உள்ளது அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கிருபாகரன் அவர்களை Receiver ஆக நியமனம் செய்து இந்த சொத்துக்கள் அனைத்தும் அவர்களது கண்காணிப்பில் உள்ளது அந்த சூழலில் இந்த திட்டத்திற்கு எப்படி அனுமதி கொடுக்க முடியும் என கூறினார். இந்த திட்டம் அமையவிருக்கும் கிராமத்தில் Village Map Contra உள்ளது. அது இந்த திட்டத்திற்கு மத்தியில் செல்கிறது. கிராம வரைபடத்தில் இருக்க கூடிய நடைபாதை, ஓடை அனைத்தும் அரசுக்கு சொந்தமானது அதை தனிநபர் சொந்தம் கொண்டாட முடியாது. நடுவில் பாதை உள்ளது அதை வைத்துகொண்டு எப்படி சுரங்கம் நடத்த அனுமதி கொடுக்க முடியும். இந்த சுரங்கத்தை சுற்றி 500 மீட்டரில் 2 குளங்களும் 1 மீட்டரில் 4 குளங்களும் உள்ளன. சுற்றி 4 குளங்கள் வைத்துகொணடு நடுவில் எப்படி சுரங்கம் செய்ய முடியும். அதற்கு எவ்வாறு அனுமதி கொடுக்க முடியும். மேலும் அனுமதி கொடுத்தால் அது சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடு உண்டாக்கும் செயலாக இருக்கும். இந்த கருத்து கேட்பு கூட்டம் நடத்தக்கூடாது அதற்கு தகுதி இல்லை என ஏற்கனவே மனு செய்திருப்பதாகவும், அதையும் மீறி இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துவது சட்டத்திற்கு புறம்பானது என கூறினார்.

2. **திரு. வைகுண்டபாண்டியன், பத்மநாபமங்கலம், பஞ்சாயத்து தலைவர்:-**

இந்த குவாரி வருவதால் எங்கள் கிராமத்திற்கு வருமானம் வரும் மற்றும் ஆயிரத்தி ஐந்நூறு குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். வேலைக்காக வேனில் தூத்துக்குடி வரை செல்கிறார்கள் இந்த குவாரி வந்தால் நன்மை உண்டு. இந்த குவாரியை சுற்றி எந்த விவசாய நிலமும் இல்லை. இந்த குவாரிக்கும் எங்கள் ஊருக்கும் 7 கிலோமீட்டர் தூரம் உள்ளது. எங்கள் ஊரை சுற்றியுள்ள அனைவரும் இந்த குவாரியை வரவேற்பதற்காக வந்திருப்பதாகவும் கூறினார்.

3. **திரு. பழனித்தேவர், பத்மநாபமங்கலம்:-**

எங்கள் ஊரில் விளைநிலங்கள் எல்லாம் அப்பாற்பட்டது. எங்கள் ஊரில் வாழ்வாதாரமே இந்த குவாரிகளில் வேலை செய்வது தான். புதிதாக குவாரி

வந்தால் மக்களின் வாழ்வாதாரம் பெருகும் இதனால் எந்த சுற்றுச்சூழல் பாதிப்பும் இல்லை என கூறினார். ஏற்கனவே தொழில் வளங்கள் பத்மநாபமங்கலம் கிராமத்தை சுற்றி தான் நடக்கிறது. அதனால் இதை நாங்கள் மனபூர்வமாக ஏற்கிறோம் என்றார். விளைநிலங்கள் இல்லை அனைத்தும் தரிசு நிலங்கள், மலைகள் தான். புதிதாய் குவாரி வந்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவே இதை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

4. **திரு. வாரியர், வழக்கறிஞர்:-**

இந்த கருத்துக் கேட்பு கூட்டம் நடத்துவதற்கு முன்பாக இந்த இடம் யாருக்கு சொந்தமானது என கேட்கவில்லை. அதனடிப்படையில் இந்த கருத்துக் கேட்பு கூட்டம் சட்ட விரோதமானது என பதிவு செய்ய வந்திருப்பதாக கூறினார்.

இந்த இடம் தனது கட்சிக்காரர் வி.வி.வைகுண்டராஜன் மற்றும் வி.வி.மினரலுக்கு சொந்தமான இடம். இந்த இடத்தை சுப்புராஜனும் அவரது சகோதரரும் ஒரு கைத்தடி பத்திரம் மூலமாக என்னுடைய கட்சிகாரருக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். எழுதி கொடுத்த பின் தவறுதலாக கையெழுத்து செய்துவிட்டேன் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். ஆனால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது. அதை தொடர்ந்து உச்சநீதிமன்றமும் இந்த வழக்கை தள்ளுபடி செய்துள்ளது. மேலும் Review petition-ம் தள்ளுபடி செய்யப்பட்டு உயர்நீதிமன்றத்தால் Receiver நியமனம் செய்துள்ளது. இது தொடர்பான ஆவணங்கள் எல்லாம் எங்களிடம் உள்ளது என்றார். இந்த இடம் தொடர்பாக மேலும் ஒரு வழக்கு வள்ளியூர் நீதிமன்றத்தில் உள்ளது. நீதிமன்றத்தில் வழக்கில் உள்ள இடத்தை எதன் அடிப்படையில் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்துகிறீர்கள் என வியப்பாக உள்ளது என்றார். அரசாங்க வழக்கறிஞர்கள் மூலம் இந்த இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என அந்த கிராம வி.ஏ.ஓ-விடம் கேட்கலாம். நில உரிமையாளர் பெயர் இல்லாத இடத்திற்கு நீங்கள் எதன் அடிப்படையில் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்துகிறீர்கள் என தெரியவில்லை. இந்த கருத்துக் கேட்பு கூட்டம் சட்டவிரோதமானது, மேலும் இந்த இடம் சுப்புராஜனுக்கு சொந்தமானது அல்ல என உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற ஆவணங்களை தங்களிடம் சமர்ப்பிக்க வந்துள்ளதாக கூறினார்.

5. **திரு. வி.ராமசுப்பு, வழக்கறிஞர், திருவைகுண்டம்:-**

இந்த கருத்துக் கேட்பு கூட்டமானது இந்த ஊரை சுற்றியிருக்கும் பொதுமக்களுக்கானது, இந்த குவாரி வருவதால் மக்களுக்கு நன்மையா தீமையா என்பதற்கான கூட்டமே தவிர, உரிமையாளர் யார் என்பதை பற்றி தீர்மானிக்கும் கூட்டம் இது இல்லை. உரிமையாளர் பற்றி வாதாடுவதற்கு சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும் என கூறினார். வி.வி. மினரல் நிறுவனம் தொடர்பான வழக்கு பிரபலமானது என்பதால் வழக்கறிஞராக அதை நான் ஆரம்பத்திலிருந்து கண்காணித்து வருகிறேன் அதனால் அந்த வழக்கை பற்றி எனக்கு தெரிந்ததை கூறுகிறேன் என்றார். இதற்கு முன் பேசிய வழக்கிஞர் கூறியது அனைத்தும் பொய், இந்த கல்குவாரி இடமானது வைகுண்டராஜனுக்கு தான் பாத்தியப்பட்டது என நீதிமன்றம் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என கூறினார். இந்த வி.வி. மினரல் நிறுவனத்திற்கு மொத்தம் 12 பங்கு தாரர்கள்

அதில் திரு. சுப்புராஜன் ஒரு பங்குதாரர் எனவே அவருக்கு எல்லா உரிமையும் உண்டு என கூறினார். மாண்புமிகு உச்சநீதிமன்ற தற்சமயம் உத்தரவுகளின் இந்த நிறுவனம் தொடர்பான வழக்கானது வள்ளியூர் நீதமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அது மட்டுமல்லாமல் இந்த வழக்கு தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கிருபாகரன் அவர்களை Receiver ஆக நியமனம் செய்து இந்த சொத்துக்கள் சம்பந்தமாக முறையீடுகள் அனைத்தும் அவர்களது கண்காணிப்பில் உள்ளது என கூறினார். இது தொடர்பாக மாதம் மாதம் ஒரு கூட்டம் நடைபெறுகிறது. சார் ஆட்சியர் அவர்கள் முன்னிலையில் பொய்யான தகவல் கூறினால் CRPC-340-ன் படி அது குற்றமாகும். வி.வி. மினரல் யாருக்கு சொந்தம் என நீதிமன்றம் எந்த உத்தரவுகளும் வழங்காத நிலையில் அது வைகுண்டராஜனுக்கு தான் சொந்தம் என இவர்களே பொய்யான ஆவணம் செய்து காண்பிப்பதாகவும் கூறினார். ஒரு மாதத்திற்கு முன்னால் இதே இடையூறிலிருக்கும் சொத்தில் உள்ள இடத்திற்கு தி/ள். அரிமா கிரைன்டிங் நிறுவனம் பெயரில் அனுமதி கோரினார்கள் அதிலும் 12 பங்குதாரர்கள் உள்ளனர். வைகுண்டராஜன் குடும்பத்தில் ஆறு நபர்கள் மற்றும் ஜெகதீசன் குடும்பத்திலும் 6 நபர்கள் உள்ளனர். அவர்கள் எப்படி வழக்கு நிலுவையில் உள்ளபோது கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தினார்கள். இந்த வழக்கறிஞர்கள் அந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் இந்த இடமானது பிரச்சனையில் உள்ளது இதில் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தக் கூடாது என சொல்லியிருக்க வேண்டும் என கூறினார். உரிமையாளர் தொடர்பான பிரச்சனைகளிருந்தால் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும், பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளின் பொன்னான நேரத்தை வீணாக்க வேண்டாம் என கூறினார். இந்த ஊர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை, இந்த குவாரி வந்தால் கட்டிட வேலை பொருள்கள் இங்கு சுற்றியுள்ள மக்களுக்கு மலிவான விலையில் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது அதை தடை செய்யக் கூடாது. இது புதிதாய் வரும் குவாரி, ஏற்கனவே உள்ள குவாரி விரிவாக்கம் சென்றால் அதில் புகார்கள் இருந்தால் அதை தடை செய்ய கோரலாம், இங்கு இவர்கள் பதிவு செய்வது எல்லாம் பண ஆதாயத்திற்காக என கூறினார்.

**6. திரு.காசிவேந்தன், பத்பநாபமங்கலம்:-**

அதாவது சர்வே எண்: 1123/2ல் 4.82.1 ஹெக்டேர்-ல் குவாரி அமைக்க விண்ணப்பித்துள்ளனர். இந்த இடத்திற்கு குவாரி அமைக்க அரசாங்கம் அனுமதி கொடுக்கவில்லை என்றால் வேறு எந்த இடத்திலும் குவாரி நடக்காது என்றார். 5 கிலோமீட்டர் வரை தொலைவில் குடியிருப்புகளோ, புராதான சின்னங்கள் எதுவும் இல்லை என்றார். இந்த குவாரி அனுமதி கொடுத்தால் மதுராமங்கலம், ஸ்ரீ மூலக்கரை, சீத்தாங்குளம், அனியாபரநல்லூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். வேலையில் பின்தங்கியிருக்கிறோம், கொல்லாங்கொட்டை நிறுவனத்திற்கு தான் வேலைக்கு செல்கிறோம். இந்த குவாரி அமைந்தால் இளைஞர்கள் வேலைக்கு செல்வார்கள் நல்ல வருமானம் கிடைக்கும், எங்கள் பஞ்சாயத்திற்கும் வருமானம் கிடைக்கும். இது பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம், நீதிமன்ற கருத்துக்கள் இங்கு பேச இயலாது என்றார். இதற்கு அதிகாரிகள் எந்த மறுப்பும் தெரிவிக்காமல் அனுமதி வழங்கலாம் என கருத்துக்களை கூறினார்.

7. **திரு.எஸ்.வி.சங்கர்பாண்டியன், சமூக ஆர்வலர், திருநெல்வேலி:-**

எனது குடும்பங்கள் மற்றும் சொந்தங்கள் பத்மநாபமங்கலம், பேரூர் அதை சுற்றி உள்ளதால் இங்கு கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுவதை தெரிந்து தனது கருத்துக்களை தெரிவிக்க வந்திருப்பதாக கூறினார். இது அண்ணன், தம்பி பிரச்சனையை கேட்பதற்கு கூட்டமா இல்லை, பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டமா என்று தெரியவில்லை, வழக்கு நிலுவையில் உள்ளது என கூறுகிறார்கள், அதற்கும் இந்த கருத்துக் கேட்பு கூட்டத்திற்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை. வழக்கு நிலுவையில் உள்ள போது EIA-ன்படி Environmental Clearance வாங்கக் கூடாது என எந்த சட்டமும் இல்லை. அதை அதிகாரிகளுக்கு தெரிவிப்பதாக கூறினார். இது வைகுண்டராஜன் அவர்கள் எழுதிக் கொடுத்த இடம், அவர்கள் குடும்ப பிரச்சனையினால் இந்த இடத்தை திரும்பப் பெற வேண்டும் என்பதற்காக நீதிமன்றத்திற்கு சென்றிருக்கிறார்கள். இங்கு மட்டும் இல்லை திருநெல்வேலி, சாத்தான்குளம் போன்ற அனைத்து இடங்களிலும் இதே நிலை தான் என்றார். திரு. சுப்புராஜன் அவர்கள் மீது உள்ள வன்மத்தில் தான் வைகுண்டராஜன் அவர்கள் வழக்கு தொடர்ந்திருப்பதாக கூறினார். இது மக்களின் வாழ்வாதாரத்திற்கானது, இந்த திட்டத்தினால் சுற்றுவட்டார மக்கள் பயன்பெறுவார்கள் என்றார். இதை வைத்து 50க்கும் மேற்ப்பட்ட கிளைத் தொழில்கள் தொடங்க வாய்ப்புள்ளது என்றார். சுத்தமான காற்றை மட்டும் வைத்துக் கொண்டு நாங்கள் உயிர் வாழமுடியாது, எங்களின் வாழ்வாதாரத்திற்காக அனைத்தையும் சகித்துக் கொள்ள தயாராக உள்ளோம் என்றார். உழைத்தால் மட்டுமே எங்களால் பணத்தை ஈட்ட முடியும், இங்கு வேறு எந்த நிறுவனமும் கிடையாது அதனால் இந்த குவாரி எங்களுக்கு வேண்டும், இதை கிராம மக்கள் எல்லாரும் வரவேற்கிறோம் என்றார்.

8. **திரு. வள்ளிநாயகம், பேரூர் கிராமம்:-**

இந்த குவாரி பொது மக்களுக்கு இடையூறு இல்லாத இடத்தில்தான் அமையவிருக்கிறது, பொது மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றார். இந்த குவாரி ஊரிலிருந்து 7 கிலோ மீட்டர் அப்பால் அமையவுள்ளது, அதனால் இந்த திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

9. **திரு. சுடலைமணி, வழக்கறிஞர், திருவைகுண்டம்:-**

இந்த கல்குவாரி அமைவதனால் படித்தவர்கள் மற்றும் படிக்காதவர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றார். இந்த கல்குவாரியினால் மக்களின் வாழ்வாதாரம் அதிகரிக்கும். இந்த கல்குவாரி அமைவதால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை என்றார். கிராம மக்கள் அனைவரும் இந்த கல்குவாரிக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்பதற்காக வந்திருப்பதாக கூறினார்.

10. **திருமதி. ஜெபக்கனி, சமூக ஆர்வலர்:-**

ஒரு சமூக ஆர்வலராக எந்த மாவட்டத்திலிருந்தும் கருத்துக்கள் கூற வரலாம் என்றார். இந்த கல்குவாரி அமைந்தால் மக்களுக்கு பெரிய நன்மைகள் உருவாகும் என்றார். இளைஞர்கள், பெண்கள் மற்றும் லாரி ஓட்டுநர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றார். அதனால் இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**11. திரு. சிவக்குமார், ஓட்டுநர்:-**

எங்களைப்போல் ஓட்டுநர்களுக்கு வாழ்வாதாரமே இந்த குவாரிதான் அதனால் இந்த குவாரியை வரவேற்பதாக கூறினார். ஒரு குவாரி வருவது அனைவருக்கும் முன்னேற்றத்தை தரும் அதனால் இதை வரவேற்பதாக கூறினார்.

**12. திருமதி. சித்ரா, பத்மநாபமங்கலம்:-**

இங்கு கல்குவாரி செயல்படுவதினால் எங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்றார், அதுமட்டுமல்லாமல் இங்கு குவாரி செயல்படுவதினால் கல், மண் குறைந்த விலைக்கு தருகிறார்கள், அதனால் குவாரி வருவதை வரவேற்பதாக கூறினார்.

**13. திரு. அர்சுணன், திருவைகுண்டம்:-**

குவாரி நடைபெறுவதால் நமது மாவட்டத்தின் வளர்ச்சிக்கும், உள்கட்டமைப்புக்கும் முன்உதாரணமாக இருக்கும். தொழில் வளர கிராம பஞ்சாயத்து தலைவர்கள் அவர்களும் ஒத்துழைப்பு வழங்கி அனுமதி வழங்க வேண்டும், என கேட்டுக் கொண்டார்.

**14. திரு. சங்கரலிங்கம், வழக்கறிஞர்:-**

இது கிராமப்புற பகுதி, படிக்காத மக்கள், குறைந்த படிப்பு படித்த இளைஞர்கள் இருக்கின்ற பகுதி. இந்த பகுதிகளில் குவாரிக்கு அனுமதி கொடுத்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றார். ஊராட்சி மன்ற தலைவரை மீறி எந்த விதிமீறல்களும் நடைபெறாது. ஆகையால் இந்த குவாரி வருவதற்கு எங்களுக்கு மனபூர்வமான சம்மதம் என்றார்.

**15. திரு. ரமேஷ், வழக்கறிஞர், திருவைகுண்டம்:-**

திருவைகுண்டம் நகரம் வளர்ந்து வரும் நகரம். கட்டுமான பகுதிகளுக்கு தேவைப்படும் எம்.சாண்ட் மற்றும் குண்டுக்கல் அனைத்தும் திருவைகுண்டம் பகுதிக்கு அப்பால் 15 கி.மீ தள்ளிதான் வாங்குகிறார்கள். பத்மநாபமங்கலம் பகுதிகளில் இரண்டு குவாரிகள் மட்டுமே செயல்படுகிறது. வளர்ந்து வரும் நகரம் என்பதால் அதிகமான கட்டுமானங்கள் நடைபெறுகிறது, அதற்கு தேவையான கற்களை அதிகமான விலை கொடுத்து வாங்குகிறார்கள். இந்த குவாரி வருவதனால் கற்கள் மற்றும் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதனால் இந்த குவாரி வேண்டும் என கூறினார்.

**16. திரு. பசும்பொன்ராஜ், வழக்கறிஞர்:-**

இந்த பகுதி மக்கள் விவசாயத்தை சார்ந்து வாழ்கிறார்கள். எல்லா காலங்களிலும் விவசாயம் கைகொடுப்பதில்லை மூன்று மாதங்கள் மட்டுமே கைக்கொடுக்கிறது. இந்த கல்குவாரி அமைந்தால் இந்த பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் அதனால் அனுமதி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதாக கூறினார்.

**17. திரு. பலவேசகண்ணன், வழக்கறிஞர்:-**

இது பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம், உரிமையாளர் தொடர்பான கருத்துக்கள் இங்கு பேச தேவையில்லை என்றார். அரசாங்க கட்டி கொடுக்கும் விலையில்லா மானிய வீடுகள் அமைந்திருக்கென்றால் இந்த கல்குவாரியால் தான் என்றார். ஆற்று மணல் 2 யூனிட் வாங்கவேண்டும் என்றால் 26000 ரூபாய். அவ்வளவு பணம் கொடுத்து வாங்கி வீடுகள் கட்ட முடியாது. இந்த கல்குவாரி அமைவதினால் யாரும் பாதிக்கப் போவதில்லை. வனத்துறையினர் மான்களை

சரியாக பாதுகாக்கிறார்கள் என்றார். திருச்செந்தூர் பகுதி சுற்றுலா தளமாக உள்ளதென்றால் அது மூலக்கரையில் இருக்கும் கல்குவாரியால் தான் என்றார். அதனால் இதை முறைப்படி அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**18. திரு. சுரேஷ்குமார், சமூக ஆர்வலர், ஸ்ரீ மூலக்கரை கிராமம்:-**

இங்கு சுற்றுவட்டார கிராமங்கள் அனைத்தும் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கியவர்கள் என்றார். அரசாங்கம் அனைத்து மாவட்டங்களிலும் வேலை வாய்ப்பு முகாம் நடத்துகிறது, எங்களுக்கு வேலை வாய்ப்பு இந்த குவாரிகளால் தான் என்றார். இங்கு பத்மநாபமங்கலத்தை சுற்றி 5 குவாரிகள் 25 வருடங்களாக செயல்பட்டு வருகிறது. இந்த குவாரிகளால் எங்களது கிராம பகுதிகளின் கட்டமைப்புகள் உயர்ந்திருக்கிறது என்றார். இங்கு லாரி ஓட்டுநர்கள் மற்றும் பொக்லைன் ஆப்ரேட்டர்கள் தான் அதிகம், இந்த குவாரி அமைந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அது மட்டுமல்லாமல் எங்கள் கிராமத்தில் ஒரு நிகழ்ச்சி என்றால் நிதியுதவி (Sponser) செய்கிறார்கள். கூரை இல்லாத வீடுகளாக மாறியிருப்பதற்கு இந்த கல்குவாரியும் ஒரு காரணம் என்றார். அதனால் எங்களுக்கு இந்த குவாரி வேண்டும் என பதிவு செய்தார்.

**19. திரு. அக்பர், பேட்மாநகரம்:-**

இந்த கல்குவாரி வருவதினால் பொது மக்கள் அனைவருக்கும் நன்மை இருக்கிறது என்றார்.

இறுதியாக, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி அவர்கள் பொதுமக்கள் வேறு யாரேனும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறீர்களா என வினவினார். பொதுமக்கள் யாரும் வராததால் கருத்துக் கேட்புக் கூட்டம் நிறைவடைந்ததாகத் தெரிவித்தார். வாய் மொழியாகவும் எழுத்துப்பூர்வமாகவும் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் கருத்துக்களும் ஆடியோ/வீடியோ பதிவுகளுடன் தலைமை அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை மூலமாக மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொண்டார். இந்த பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்ட நடவடிக்கையுடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட காணொலி அடங்கிய குறும்பதிவு (எண்ணம்-2) இணைப்பு I-ல் இணைக்கப்பட்டுள்ளது.
2. பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பற்றிய விபரம் இணைப்பு II-ல் இணைக்கப்பட்டுள்ளது.
3. இந்த திட்டம் அமைவதை தொடர்பாக எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் மொத்தம் (எண்ணம்-10) இணைப்பு III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தூத்துக்குடி.

சார் ஆட்சியர்,
தூத்துக்குடி.